வளன் ஆயம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பெண் கவிஞர்கள் படைப்புகளில் பெண் விடுதலைச்சிந்தனைகள்

**முனைவர் பொன்.புஷ்பராஜ்,** இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-2

மின்னஞ்சல் முகவரி – ponppr@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை சமயம், இனம், சாதி, பண்பாடுகளுடன் இணைந்த சமூக நடைமுறைகளும் நம்பிக்கைகளும் பெண்களுக்கு எதிரான இறுக்கநிலையைச் சமூகத்தில் தோற்றுவித்துள்ளன. இதனால் ஆணாதிக்கத்திற்கு உட்பட்டு அவர்களின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தாங்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம் என்னும் உணர்வின்றிப் பெண்கள் அதிகார மையத்துக்கு உட்பட்டு அடங்கி வாழ்ந்தனர். பெண், பெண்ணியம், பெண்ணுரிமை குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படத் தொடங்கிய பின்னர் இத்தகைய விழிப்புணர்வுச்சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்ட பெண் படைப்பாளர்கள் புதுக்கவிதை, உரைநடை, புதினம், சிறுகதை ஆகிய புத்திலக்கியங்களின் வாயிலாகத் தங்கள் கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். அதனைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

விடுதலை – மரபு – முடை நாற்றம் - கற்பூரம் - திராவகம் - ஜனித்தல் - மதிப்பீடு

**முன்னுரை**

இலக்கிய உலகில் கவிதையானது அவ்வப்போது மனித உணர்வில் புரட்சிகளை ஏற்படுத்துகிறது. கவிதை தொன்று தொட்டுவரும் மதிப்பீடுகளை உடைத்து எறிகிறது. கவிதை புத்தம் புதிதான உலகைக் காணுமாறு செய்துவிடுகிறது.

பெண்களை உயர்வாகக் கருதும் போக்கு தொன்று தொட்டு நிலவி வந்துள்ளமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. பெண்களுக்குச் சமூகத்தில் சம உரிமையையும் உயர்வையும் வழங்கவேண்டும் என்பதில் அரசும்,

சட்டங்களும் உறுதியாக உள்ளன. ஆனாலும் அவை இன்னும் சரியான வளர்ச்சி நிலையை அடையவில்லை எனலாம். எனவே, இருபதாம் நூற்றாண்டுப் படைப்பாளிகள், பெண்களின் உயர்வையும் அவர்கள் அடைய விரும்பும் விடுதலைகளையும் படைப்புகளின் வழியே எடுத்துரைக்களாயினர்.

தமிழ்க் கவிஞர்களின் பெண்விடுதலை முன்னெடுத்துச் சென்றவர்களுள் பாரதியார் முன்னோடியாகக் கருதப்படுகிறார். அவர் தம்முடைய கவிதைகளில் மிகுதியும் பெண்மை, பெண் விடுதலை என்னும் தலைப்புகளில் கவிதைகளைப் படைத்தவராவார்.

> **“பெண்கள் படைத்துள்ள படைப்புகளில் பெண்ணானவள், வலியை மட்டும் புலம்பித் தீர்க்காமல், பழையதை எடுத்துரைத்து அதன் மரபுகளை உடைத்தெறிந்து விட்டு புதிய அடையாளங்களை உருவாக்கி இன்றைய பெண்களின் தேவை இவைதான் என்பதனை படைத்துக் காட்டுவதாகும்.”**[1]

அவ்வகையில் கவிதைப் படைத்துள்ள கவிஞர்கள் சுகிர்தராணி, தமிழச்சி சல்மா, மாலதிமைத்ரி, குட்டி ரேவதி ஆகியோர் கவிதைகளில் இடம் பெற்றுள்ள பெண் விடுதலை குறித்த சிந்தனைகளை இனி காணலாம்.

பெண்களை இழிநிலைக்கு ஆளாக்கிய சூழலை எடுத்துக் கூறுவர் பெண்ணியவாதிகள். அதனால், மங்கையர் சிறப்பு கருதி,

‘**மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல**

**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா**’ என்றார் பாரதியார்.

மேலும் பாரதிதாசன்,

‘**பெண்ணொடாண் நிகர்**’ என்று சரிநிகர் சமானம் பேசினார். இவ்விரு கவிஞர்களும் பெண்மையைப் போற்றிப் பாடியவர்களுள் சிறப்பானவர்களாகக் கருதப்படுகின்றனர். பெண்களின் அறிவுப் புரட்சிக்குறித்துப் பாடிய கவிஞர்களுள் பாவேந்தர் பாரதிதாசன் மிகவும் இன்றியமையாத கவிஞராக இருக்கிறார். அவர்,

“**வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்**

**பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே. . .**

**மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற**

**காடு, மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே**”

என்று பெண்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்.

ஆணாதிக்கத்திலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பிய பெண்கவிஞர்கள், பெண்களுக்கு ஆதரவாகப் பல நிலைகளில் கவிதை பாடியுள்ளனர். கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷிணி, பெண் கவிஞர்களுள் குறிப்பிடத்தகுந்த ஒருவர் ஆவார். அவர்,

**"சீதையாய்**
**முடக்க வேண்டாம்**
**கண்ணகி நெருப்பாய்ப்**
**போர்ச் சிலம்பு எடுப்போம்**
**வெள்ளையனே வெளியேறு**
**பழைய முழக்கம்**
**ஆணாதிக்கமே வெளியேறு**
**புதிய முழக்கம்"**[2]

என்று பாடுகின்றார். அவர் ஆண்களின் ஆதிக்கச் சிந்தனைகளை மட்டுமே வேரறுக்கக் கோருகிறார்.

பெண்களின் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களான, திரு.வி.க. ராஜாராம் மோகன்ராய், போன்ற தலைவர்களில் தந்தை பெரியார் மிகவும் இன்றியமையாதவர் ஆவார். அவரைப் பற்றி கவிஞர் பொன்மணி வைரமுத்து,

**"கல்லாகிக் கிடந்த அகலிகை**
**இராமன் கால்பட்டதும் மீண்டும்**
**பெண் ஆனாளாம்**
**நீண்ட காலமாய்**
**நிலக்கரியாய்க் கிடந்த பெண்கள்**
**வைக்கம் வீரர்**
**வருகைக்குப் பின்புதான்**
**வைரமாய் ஆனார்கள்"**[3]

என்று பாடுகிறார்.

மனிதச் சமூகம் விடுதலை பெறவேண்டும் எனில் பெண்கள் விழிப்புற்றிருக்க வேண்டும். ஆண்கள் உரிமைகளுக்கு நிகரான உரிமைகளைப் பெறவேண்டும்.

ஆகவே, பாரதியார்,

**'பெண்ணுக்கு விடுதலை இல்லை என்றால்**

**பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை இல்லை'**

என்று முழங்குவதனைக் காணமுடியும். கவிஞர் நிர்மலா சுரேஷ்,

**"அணைக்க முடியாத**
**ஒரே நெருப்பு**
**பெண்மை என்னும்**
**நெருப்பு தான்"[4]**

என்று பாடுவதால் பெண்மை என்பது நெருப்புக்கு நிகரானது. பெண்கள் தம் விடுதலைக்காக வீறுகொண்டு எழுந்தால் இவ்வையம் தாங்காது என்று பாடுகிறார்.இவ்வாறாக ஆண், பெண் கவிஞர் என்ற வேறுபாடுகள் பார்க்காமல் பெண் நிலையை மட்டுமே கருத்தில் கொண்டு புலவர்கள் பலர் பாடியுள்ளனர்.

**எழுத்து ஓர் ஆயுதம்**

பெண்கள் தம் உரிமைகளை வென்றெடுக்க எழுத்துரிமை, கருத்துரிமை ஆகியன அவசியம். அவ்வகையில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலகுக் கவிதையாக அறியப்பட்ட புதுக்கவிதையின் வழி, பெண் கவிஞர்கள் பலரும் கவிதைகள் இயற்றினர்.

இவ்வாறு புதுக்கவிதைக் கவிஞர்களின் முன்னோடிகளைப் போலவே, தற்சமயம் பெண்ணியக் கவிஞர்களும் தம்கவிதைகளில் பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக எழுத்தை ஒரு கருவியாகக் கையாண்டுள்ளனர். கவிஞர் குட்டி ரேவதி தம் கவிதையொன்றில்,

**"என்னை எனக்கே அடையாளம் தெரிகிறது என்றும்**
**பெண்மை எனப்பட்டதும் கற்பு எனப்பட்டதும்**
**யோனியின் புனிதம் என்று கட்டமைக்கப்பட்டக் கருத்தியல்**
**காகிதங்களும் சொற்களும் படங்களும்**
**நரைகளாய் உதிரத்தொடங்கி**
**நான் ஒரு மாபெரும் மானுடப்பெண்ணாய்**
**எழுந்து நிற்க முடிகிறது"[5]**

என்று பாடுகிறார். இதுவரையில் பெண்களுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட கருத்தியல்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்ததை அவர், "காகிதங்களும் சொற்களும் படங்களும் நரைகளாய் உதிரத்தொடங்கி" எனும் குறியீட்டின் வழி எடுத்துரைத்து, நான் ஒரு மாபெரும் "மானுடப்பெண்" என்கிறார்.

ஆதலினால், கவிதைகள் அனைத்தையும் கற்பனை என்கிற புரட்சியாளர்களைச் சாடும் விதமாக,

**“கற்பனையின் துணுக்குகளும் துகள்களும்**

**மண்டிய வெளியில் தோன்றும் கவிதையை**

**ஓர் உறைவாளாக்க**

**எவ்வளவு தீயில் காய்கிறேன் யான்”**[6]

என்று, கவிதையைத் தாம் ஓர் ஆயுதமாகவும், ஆணாதிக்கத்திற்கு எதிரான உலகில் போராடும் ஒரு பெண்ணிற்கான கருவியாகவும் எழுத்தைக் கைக் கொண்டிருக்கிறார் என்பதனைக் குட்டி ரேவதியின் கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

எழுத்தைச் சுவாசிக்கும் மற்றொரு கவிஞர் சுகிர்தராணி தாம் கருவியாகக் கைக்கொண்ட கவிதை பிறந்த சூழலை மிக அழகான குறியீட்டு வழியாக எடுத்துரைக்கிறார்.

**“இரத்தப் பிசுபிசுப்போடு துடித்து விழுந்த**

**என் முதல் கவிதையை**

**உன் காலடியில் இடுகின்றேன்.”**[7]

என்று முதல் கவிதையைக் குழந்தையோடு உவமிக்கிறார்.

**திருமணம்:**

சமூகத்தில் பெண்களுக்கான திருமணம் ஏற்பட்ட பின்னர் நிகழும் சூழல்கள் யாவும் துன்பம் தரக்கூடியதாகவும் மனவெறுமையைத் தரக்கூடியதாகவும் இருக்கும். சுதந்திரமான மனநிலை என்பது மாறிவிட்ட சூழலைக் கவிஞர் சல்மா,

**“இந்த உன் வீடு தரும் சௌகரியங்கள்**

**வீட்டிற்குள்ளிருப்பதைக் காட்டிலும்**

**வீட்டிற்கு வெளியே செல்லும் பயணங்களில்**

**கூடவே பயணித்து இம்சிக்கும்**”[8]

என்று பாடுவதைக் காணலாம்.

காதல் என்பது மதம், சாதி கடந்தது. எனவே, மனிதனுக்கு மனிதன் கொள்ளும் திருமணத்தில் கலப்பு என்ன வந்தது. கலப்புத் திருணம் ஆரியர்கள்

வந்ததிலிருந்து வந்ததுதான். அவன் தான் ஆடு, மாடு, நாயைக் கட்டிக் கொண்டிருக்கின்றான் என்பதாக அவர்களுடைய கதைகள், இதிகாசங்கள், வேதங்கள் என்பவைகளில் காணப்படுகின்றன. இது போன்றதன்றி மனிதச் சீவனுக்கும் மனிதச் சீவனுக்கும் நடைபெறும் திருமணமேயாகும். இதில் கலப்பு என்று சொல்வதற்குப் பொருளே கிடையாது." என்பது பெண்ணிய வாதிகள் கூற்றாகும். இக்கருத்தை உற்று நோக்க வேண்டும்.

கவிஞர்கள் பலரும் காதல் கவிதைகளைத் தீட்டுவதில் ஆர்வம் கொள்வது இயல்பு. பெண்களைக் காதல் பதுமைகளாக எண்ணும் மனம், கதை, கவிதை போன்றவற்றோடு காதலை இணைத்துப்பார்க்கிறது. பெண் கவிஞர்கள் பலரது பார்வையில் காதல் என்பது பெண்களுக்கான உரிமை என்பதும், அதுவே அவர்களைச் சமூக் கட்டுக்களிலிருந்து விடுதலையைத் தருகின்றது என்பதும் அவர்களின் கூற்றாகும். இதனை,

**"உலகத்து மொழிகளின்**
**அத்தனை அகராதிகளிலும்**
**தேடித் தேடி கடைசியில்**
**தெரிந்து கொண்டேன்**
**உன் பெயரில்**
**காதலுக்கு நிகரான**
**இன்னொரு சொல்லை"**[9]

எனும் கவிதை எடுத்துரைக்கக் காணலாம். "ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்" என்னும் கூற்றின் அடிப்படையில் காதல் மிக உயர்வானது என்பதனை அறிய இயலும்.

**காதலின் உயர்வு:**

மனித இனத்தில் காதல் மிக உயர்வானது. தூய்மையானது காதலுக்கு நிகரான அன்பு வேறெதிலும் இல்லை. எனவே,

**"சாணிமேல் சிரிக்கிறது**
**பூசணிப் பூ மனசு**
**ஆசையாய் அதை அள்ளி**
**அணைத்தபடி மலர்ந்திருக்கிறது மாக்கோலம்**
**குளிர்வாடைக்கு மருதாணி**
**போர்த்திய பத்து விரல்களிலும்**

**கர்வமாய் அமர்ந்திருக்கிறது காதல்"**[10]

என்று பாடுகிறார் கவிஞர் தமிழச்சி காதலுக்காக எடுத்துக் கூறப்பட்ட உவமையால் சிறப்பு பெறுகிறது கவிதை. மேலும், இக்காதலில் தான்,

**"வெயிலள்ளிக் குடித்துக்**

**கருப்பன் செகப்பனாவான்**

**செப்பி கருவாச்சியாவாள்,** என்றும்,

**வண்ணங்களற்ற காதலை**

**வெயில்தானே விதைக்கிறது"**[11]

என்றும் காதலைச் சமதர்மமாக மாற்றுவதை அறிந்து கொள்ள இயலுகிறது. இந்த கலியுகத்தில் கற்காமலேயே தோன்றும் உணர்வு தான் காதல். அந்த உணர்வுக்கு மயங்காதவர் எவருமிலர். அதனை விரும்பாதவர் யாரும் இல்லை. அன்பு, பாசம் போன்றவைகளுடன் அந்நியப்பட்டு நிற்பதுதான் காதல என்பதனை உணரலாம்.

**ஆண் பெண்:**

ஆணும் பெண்ணும் கொள்ளுகின்ற காதல், கண் உணர்வுகளால் ஏற்படும் அன்பு எனலாம். காதல் எப்படி உருவானது என்பதனையும் அதன் பரிமாணங்களையும் கவிஞர் சுகிர்தராணி சொல்லோவியமாக்கியுள்ளார்.

**"மகரந்தத் துகள்கள் காற்றில் பரவும்**
**வசந்த காலத்தின் பிற்பகுதியில்**
**லேசாகக் கசியும் நீலநிறச் சுடரென**
**என் கண்களில் நுழைகிறது உனதுயிர்**
**அந்த நாளை எப்படி மறக்க இயலும்**
**அன்றுதான்**
**கருத்திருந்த எனது வானம்**
**மழையாகப் பொழிந்தது பெருங்காதலை**
**மரத்தினடியில் உன்னை நிற்க வைத்து**
**கிளையசைத்துப் பூ உதிர்த்து**
**அன்பின் சிறுதுளி காட்டுகிறேன்"**[12]

"என் கண்களில் நுழைகிறது உனதுயிர்" எனும் தொடர், காதலின் உயர்வினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும், இருள்கவ்விக் கிடந்த மனத்தில் காதலானது பெருங்காதல் என எண்ணும்படியாக அன்பின் மழையைத் தூவியது எனப் பாடுவது அழகு.

**தடைகளை உடைத்தல்:**

ஒரு தடை என்பது எதையாவது செயல்படுத்துவதற்கான பாரம்பரிய வழியுடன் குறுக்கீடு அல்லது முறிவு ஆகும். பெண் விடுதலைக்கு எதிரான தடைகளை உடைத்தல் என்பது அறிவுச் செருக்கு கொண்ட மகளிர்க்கு அது எளிதாம். இதனை,

**"சுரங்கப்பாதையின் வழியே**
**இருள் மூண்ட சுவர்கள் தூர்ந்துபோகும்**
**பாதையின் அடுத்தடுத்த கணம்**
**சூரியனைக் குடைந்து கொண்டே போகிறோம்**
**ஒவ்வொரு கனவிற்குப் பின்னும் நெம்பி**
**உடைக்கிறோம் காலத்தின் கரிய சுவரை"**[13]

என்று பாடுவதன் வலிமை சொல்லுக்கு உண்டு என்பதனை உணர்த்துகின்றன. சூரியனைக் குடையும் வன்மைக் கரங்கள் கவிதைக் கரங்கள் என்பதான இக்கவிதை குறியீடாக்கிக் காட்டுகிறது.

வலிமை, திண்மை, வலிமை, உறுதிப்பாடு போன்ற சொற்கள் வலிமையைக் கூறுகின்ற பிரிதோர் சொற்களாகும். வலிமை என்பது அச்சத்தை வெல்லவும் பொறுப்பற்ற தன்மையைத் தவிர்க்கவும் முயற்சிக்கும். கவிஞர் சல்மா,

**"எந்தக் காலமென்றில்லாமல்**
**எல்லாக் காலங்களிலும்**
**உன் கழிவுகளைக் கொட்டி**
**உன்னைச் சுத்தப்படுத்தியிருக்கிறாய்**
**உன் தாகம் தணிக்கத் தயாராகிறாய்**
**உன் அசுத்தங்களை**
**அடித்துக் கொண்டு கோக**
**இது நதியில்லை**
**ஏரி"**[14]

என்று பெண்களின் வலிமையை "ஏரிக்கு" உவமையாக்கிப் பாடுகிறார்.

பெண்களின் வளர்ச்சியில் சமயச் சாயங்கள் ஏற்றப்பட்டன. "இந்தச் சமயச் சாயம் மேலும் பெண்களுக்கு இவ்விதி முறைகளிலிருந்து வெளியேற முடியாத மோசமான சூழ்நிலையை உருவாக்கின" என்பர். பெண்களின் விடுதலைச் சிந்தனைக்குச் சமயங்களும், சமயங்களும், சமூகமும் தடைகளாக இருந்தன. பெண்படைப்பு என்பது தொன்மச் சிந்தனையில் இருந்தே தோன்றுகிறது. பைபிளில் கூறப்பட்டுள்ள கருத்தின் அடிப்படையில்

**"ஆதித்தாயின் உருவி எடுக்கப்பட்ட**
**விலா எலும்பிலிருந்து**
**படைக்கப்பட்டிருக்கிறாள் அவள்"**[15]

என்று கவிதைபாடுகிறார் சுகிர்தராணி.

ஆதித்தாய் என்பவள் அடிமையின் சின்னம். ஆனால், கவிஞர் மாறாக வனப்பில் அழகுகள் அவள் உடம்பில் கூடி மிளிர்கின்றன என்பதனால் அவள் அழகுப் பதுமை எனும் பொருள்படுகிறது. இக்கவிதையைப் போலவே,

**"நேற்று பகலில்**
**விழுங்கப்பட்ட வார்த்தைகளுக்கு**
**இன்று இரவில்**
**இறக்கைகள் முளைத்தன.**
**படுக்கை விரிப்புகள், மிதியடிகள்**
**முகம் துடைக்கும் துண்டுகள், கைக்குட்டைகள்,**
**புடவைத் தலைப்புகள்**
**இவற்றில் புதைக்கப்பட்டும், மறைக்கப்பட்டுமிருந்த**
**நைந்தும், பிய்ந்ததுமான"**[16]

பிற சொற்களைத் தேடிக் கவிஞர் புனைகிறார். நேற்று என்பது தொன்மமாகவும் அந்த வார்த்தைகளுக்கு இன்று இரவில் இறக்கை முளைத்தது என்கிறார். விடுதலைச் சிந்தனையோடு வளரும் பெண் குழந்தைகள் மீளவும் அடிமைத்தளத்திற்கு இட்டுச் செல்லும் விதமாக, மூத்தோர்களான பழமைவாதிகள், "உரத்துப்பேசக் கூடாது" என்பதாக இக்கவிதை பேசுகிறது. ஆதலின் இறக்கைகள் பிடுங்கப்பட்ட எல்லா வார்த்தைகளும் மீண்டும் புதைக்கப்பட்ட இடங்களுக்கு அவசரமாகத் திரும்பின என்று கவிஞர் பாடுகிறார். விடுதலை இதனை,

**"அவள் உறங்காமல் இயங்கிக் கொண்டே இருக்கிறாள்**
**உப்பாகிக் கரிக்கும் அவளை**
**இரத்தமாக்கி புரவிகளாக்கி எட்டுத்திக்குகளாக்கி**

**எழும் சூரியனைத்**

**தினம் தினம் பிரசவிக்கிறாள்”**[17]

என்று சூரியனைச் சூள் கொண்டு பிரசவிக்கிறாள் எனவரும் தொடர் பெண்களின் வலிமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம். பெண்ணாகிய நான் எனும் தலைப்பிலான கவிதை ஒன்றில்,

**“உணர்வுகளின் குவியல், நான்**

**ஒளிதேசத்தில் வாழவிரும்பும்**

**விடுதலைப்பறவை**

**ஒரே பிறப்பில்**

**அழவும் சிரிக்கவும் ரசிக்கவும்**

**பொழியவும் எரிக்கவும் மிகழவும்**

**அழியவும் ஜனிக்கவும் பூத்தவள்”**[18]

என்றும்

**“ஜனங்கள் திரளும் நிஜக்காட்டில்**
**வேட்கை பெருகப் பெருக**
**வேட்டையாட அலைகிறேன்**
**கன்னத்தில் உருண்டு உதிரும்**
**கண்ணீர்த்துளிகளைச் சாட்சியாக்கி**
**உன்னிடம் கருணை சம்பாதிப்பதில்**
**எனக்குப் பெருமையேதுமில்லை”**[19]

விடுதலைப்பாடல் பாடும் கவிஞர் குட்டி ரேவதி. ஆணாதிக்கம் சிந்தனையை எதிர்த்துப் பாடுகிறார். இதே கருத்தைக் கவிஞர் சுகிர்தராணி,

**சொற்களின் ஈட்டியால் பதம் பார்த்து**
**என் விலாவில் குத்துகிறார்கள்**
**போலியின் பிலாத்துகள்**
**கட்டுமானம் சிதைவுற்ற அணைநீராய்ப்**
**பெருகுகிறது குருதி**
**புன்னகையொன்றால் அதைத் துடைக்கிறேன்**
**தணியாத என் தாகத்திற்குப்**
**பருகத் தருகிறார்கள்**

**திரிந்த மொழியின் பிழிந்த கள்ளை**

**கடைசித் துளியையும் திரும்ப உமிழ்கிறேன்?"**[20]

என்று அடிமைத்தனத்தின் அவமானத்தைச் சாடுகிறார்.

தமிழ்நாட்டில் சோழர் காலத்தில் அடிமைமுறை நிலை பெற்றிருந்துள்ளது. மன்னர்களும், வளம் படைத்தவர்களும் ஆண்களையும், பெண்களையும் விலைக்கு வாங்கிக் கோவில்களுக்கும், மடங்களுக்கும் தானமாக வழங்கியுள்ளனர். அடிமை விற்பனை, ஓலையில் பத்திரம் போல் பதிவு செய்யப்பட்டது. இது ஆளோலை, அடிமை விற்பனைப் பத்திரம் எனப் பெயர் பெற்றது. வறுமையின் காரணமாகத் தம் குடும்ப உறுப்பினர்களை விற்பதும் தம்மைத்தாமே விற்றுக் கொள்வதும் நிகழ்ந்துள்ளன. நெற்குற்றுதல், வேளாண் பணிகள், கோவிற் பணிகள் ஆகியன அடிமைகளின் முக்கியப் பணிகளாகும்.இவற்றை விட பெண்ணடிமைத்தனம் என்பது மிக இழிவானதாகக் கருதப்பட்டது.

பல வன்மங்களாலும், அடக்கு முறைகளாலும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்ட சூழலிலும் பெண்ணானவள் எதிர்கொண்டு நின்றாள்.

**"திராவகத்தை மறுமுறை வீசு**
**தேள்கொடுக்குகளின் வலி நான் உணரட்டும்**
**வெந்நீர் ஊற்றின் சூடு நான் அனுபவிக்கட்டும்**
**வெந்நீர் நரம்புகளின் நாணில்**
**கழுத்தும் முகமும் இழுத்துக் கட்டப்படட்டும்**
**புருவம் தீய்க்கப்பட்ட கண்கள்**
**செந்நிறச் சதைக் கோளமாகட்டும்**
**கண்திறவா நாய்க்குட்டியின் தேடலைப்போல்**
**சூம்பிப்போன என் மார்பகத்தில்**
**முலைக்காம்புத் தேடி ஏமாறட்டும் என்மகள்**
**திராவகத்தை மீண்டும் வீசு**
**இருந்துவிட்டுப் போகிறேன்**
**உன் முகத்தை உனக்கே காட்டும்**
**ஒரு துர்தேசத்தின் கொடுஞ்சிலையாய்**
**புன்னகை உறைந்த தேவதைகள்**
**ஒருபோதும் சாட்சியாவதில்லை"**[21]

எனும் கவிதை வாழ்வியலின் எதார்த்தத்தை எடுத்துரைக்கின்றன. பெண்களின் மீது நிகழ்த்தப்படும் வன்கொடுமைகளை இக்கவிதை சாடுகிறது எனலாம்.

ஆணாதிக்கம் என்பது ஒரு வகை சமூக அமைப்பாகும், அதன் அதிகாரமும் அதிகாரமும் ஆணுடன் குடும்பம் அல்லது சமூகக் குழுவில் அதிக அதிகாரம் கொண்ட ஆணாதிக்கம் என்று அழைக்கப்படுகிறது . எனவே, ஆணாதிக்கம் பெண் உருவம் மற்றும் ஒரு குடும்பம் மற்றும் சமூகக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் மீது ஆண் ஆதிக்கத்தை நிறுவுகிறது. ஆணாதிக்கமானது, பெண்கள் மீது நிகழ்த்தப்பட்டுள்ள வன்முறைகளுக்கு நியாயம் கற்பிக்கும் விதமாக,

**"முழுசாப் போர்த்திக்கிட்டா**
**மோசம் போகாதுல்லங்கிற**
**களவான்களும்,**
**ஆம்பளையோடு அந்த நேரம்**
**அங்க இங்க ஏன் போறேங்கிற**
**அரசாங்கச் சீமான்களும்,**
**"அண்ணே"ன்னு கூப்பிட்டிருந்தா**
**அபயம் கிடைச்சுருக்கும்லங்கிற**
**அரைலூசு ஆண்மக்களும்,**
**எம் பொண்ணாயிருந்தா**
**எரிச்சுப் புதைச்சிருப்பேங்கிற**
**மெத்த படிச்ச மேதாவிகளும்,**
**எட்டுத் திக்கும் சுத்திவர"[22]**

என இவ்வுலகத்தில் வாழும் பெண்கள் எந்தச் சூழலிலும் பலி இடப்படலாம் எனும் நிலையில் அதனை எதிர்த்துப் போராட வேண்டும் என்னும் நிலையில் இன்னும் உறங்குதியோ? எனும் தலைப்பில் தமிழச்சி கவிதைபாடியுள்ளார்.

கவிஞர் சுகிர்தராணி, ஆணாதிக்கச் சிந்தனையுடைய ஆடவர்களை நோக்கி, எச்சரிக்கும் விதமாக,

**"உளுத்துப்போன மரக் கட்டைகளென**
**நின்று கொண்டிருக்கும்**
**உங்கள் இதயங்களில் இரத்தம்**
**ஒரு துளியேனும் சுத்திகரிக்கப்பட்வில்லை"[23]**

என்று சாடுவதனைக் காணலாம். அவர்களின் பண்பு நலனை வெளிப்படுத்தும்விதமாக "உளுத்துப் போன மரக்கட்டைகள்" எனும் உவமையைப் பயன்படுத்துவதைக் காணலாம்.

அநீதிகளுக்கு வீறுகொண்டு எழும் பெண்களை, சொற்களை ஆயுதங்களாக்கி எறியுங்கள் என்கிறார் கவிஞர். ஆதலின்

**“என்னிடம் ஆயுதம் ஏதும் இராது**

**ஆயுதம் தரிக்கும் உடலில்லை எனக்கு**

**சொற்களை ஆடையாக அணிந்த வழக்கத்தில்**

**காற்றில் அசையும் பதாகையைப் போல்**

**உங்களை நெருங்குவேன்”24**

என்கிறார். எனவே, அறிவுப் புரட்சியே பெண்களுக்கான ஆயுதம் என்பதைப் பெண்கள் உணரவேண்டும் என்கிறார் கவிஞர்.

கடந்த கால நினைவுகளையும் அடக்கு முறைகளையும் மனம் அசைபோடும் வேளையில், அதனை அவ்வளவாகக் கடந்துவிட இயலாது.

**“என்**
**உடல் அனாதையாகக் கைவிடப்படுகையில்**
**நான் அந்தக் கடுமையான நினைவைப்**
**பழங்கால வாசனையுடன் இசையுடன்**
**என்னை வந்து சேரும்**
**அந்தச் சூன்யம் கவ்விய நினைவுகளை**
**எவ்வெப்பொழுது சந்திக்க நேரும்போதும்**
**அதை என் இடது கையால் பற்றிப்பிடித்து**
**அதன் மென்னி எலும்புகளை**
**வலது கையால் வளைத்து**
**மெல்ல முறித்து அலட்சியமாய் எறிவேன்”**[25]

என்று சொற்களை ஆயுதங்களாக்கி அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராட அழைக்கிறார் கவிஞர். அடங்கிவிடுவதாலோ அழுவதாலோ பயன் ஒன்றும் இல்லை.

**“கூர்மையான நாவுகளின் வன்மச் சொற்கள்**
**கொல்லன் உலைகளைப் போல்**
**சிறந்த கத்திகளைப் பிரசவிக்கும்**
**வன்மம் ஒரு பளபளப்பான கத்தி**
**அதன் கூர்மை**

**தன் தொடையைக் கிழித்துவிடாதபடிக்கு**
**எப்பொழுதும் தன்னுடன் கொண்டு திரியும்**
**அவத்தையில் உலவுகின்றனர்**
**கூர்மையான நாவுகள் கொண்டோர்**
**அந்தக் கத்தி என்னைத் தாக்குவதற்குள்**
**இதோ நான் அவத்தையுடன் சுமக்கும்**
**என்னுடைய கத்தி**
**அவர்களைப் பதம் பார்த்திருக்கும்.”**[26]

என்கிறார் கவிஞர் குட்டி ரேவதி.

**ஆண் பெண் சமம்**

இவ்வாறாக ஆணாதிக்கச் சமூகத்திற்கு எதிராக எதிர்வினையன்றி மற்றோர் தண்டனையைப் பெண்கள் தர இயலாது என்பதனால் உடல் வலிமை உள்ள வலிமை, அறிவுத்திறன் ஆகியவற்றை உடையவர்களாகப் பெண்கள் விளங்க வேண்டும்.

**தொகுப்புரை**

ஆணாதிக்கத்திலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பிய பெண்கவிஞர்கள், பெண்களுக்கு ஆதரவாகப் பல நிலைகளில் கவிதை பாடியுள்ளனர். பெண் மீதான மரபுசார்ந்த சமூகக்கட்டுமானம் தகர்க்கப்பட்டுப் பெண், பெண்ணியம், பெண்ணுரிமை குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படத் தொடங்கின. இத்தகைய விழிப்புணர்வுச்சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்ட பெண் படைப்பாளர்கள் கவிதைகளின் வாயிலாகத் தங்கள் கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். பெண்களை உயர்வாகக் கருதும் போக்கு தொன்று தொட்டு நிலவி வந்துள்ளமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. பெண்களுக்குச் சமூகத்தில் சம உரிமையையும் உயர்வையும் வழங்கவேண்டும் என்பதில் அரசும், சட்டங்களும் உறுதியாக உள்ளன. ஆனாலும் அவை இன்னும் சரியான வளர்ச்சி நிலையை அடையவில்லை எனலாம்.

**சான்றெண் வினக்கம்**


1. கு.பகவதி, திறனாய்வு அணுகுமுறை, ப.3
2. ஆண்டாள் பிரியதர்ஷினி, சுயம்பேசும் கிளி, ப.118
3. பொன்மணி வைரமுத்து, பொன்மணி வைரமுத்து கவிதைகள், ப.82.
4. நிர்மலா சுரேஷ், பாலைவன பௌர்ணமிகள், ப.115

5. குட்டி ரேவதி, கவிதை தொகுதி-2, ப.85
6. குட்டி ரேவதி, கவிதை தொகுதி-2, ப.306
7. சுகிர்தராணி, அவளை மொழிபெயர்த்தல், ப.13
8. சல்மா,மாலையும் இன்னொரு மாலையும் ,ப.20
9. தமிழச்சி தங்கபாண்டியன், அவருக்கு வெயில் என்று பெயர், ப.42
10. தமிழச்சி தங்கபாண்டியன், அவளுக்கு வெயில் என்று பெயர், ப.36
11. தமிழச்சி தங்கபாண்டியன், அவருக்கு வெயில் என்று பெயர், ப.83
12. சுகிர்தராணி, பலியிடப்பட்ட காதல், ப.36
13. குட்டிரேவதி, தொகுதி-2, ப.183
14. சல்மா, பசை தேவதை,ப.40
15. சுகிர்தராணி, காமத்திப்பூ, ப.20
16. தமிழச்சி தங்கபாண்டியன், அருகன், ப.28
17. குட்டிரேவதி, தொகுதி-2, ப.24
18. குட்டிரேவதி, தொகுதி-1, ப.56
19. குட்டிரேவதி, தொகுதி-1, ப.56
20. சுகிர்தராணி, காமத்திப்பூ, ப.42
21. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள், ப.23
22. தமிழச்சி தங்கபாண்டியன், அவளுக்கு வெயில் என்று பெயர், ப.101
23. சுகிர்தராணி, இப்படிக்கு ஏவாள், ப.58
24. குட்டிரேவதி, தொகுதி-2, ப.169
25. குட்டிரேவதி, தொகுதி-2, ப.141
26. குட்டிரேவதி, தொகுதி-2, ப.165